2020 மார்ச் 12]

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய அங்கன்வாடி மையம் கட்ட வேண்டுமென்றால், I.C.D.S., *அதாவது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2 இலட்சம் ரூபாயும், மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து 1,50,000 ரூபாயும் மற்றும்* MGNREGS*-ன்கீழும் நிதி பெறப்படுகிறது. இவ்வாறு மூன்று வகைகளாக நிதியினைப் பெற்று கட்டலாம். மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேற்காணும் நிதி ஆதாரங்களைப்பயன்படுத்தி,மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கன்வாடி மையங்களைச் சரி செய்துகொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

காகித ஆலை

***54347—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் பகுதியில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதியதாக காகித ஆலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, மடத்துக்குளம் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக 10–க்கும் மேற்பட்ட தனியார் காகித ஆலைகள் இயங்கிவந்த நிலையில், கடந்த 7 ஆண்டுகளாக மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கை, பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. உள்ளிட்ட நடவடிக்கைகள் மற்றும் காகித இறக்குமதி, வங்கி நடைமுறைச் சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களால் பல ஆலைகள் இயங்காத நிலை உருவாகியுள்ளது. ஆகவே, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, அந்த நிறுவனத்திற்கும் அதை நம்பியுள்ள குடும்பங்களுக்கும் பொருளாதார இழப்பு ஏற்பட்டு மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே, இந்தத் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்கின்ற வகையில் புதிய காகிதக் கொள்கை ஏதேனும் அரசிடம் உள்ளதா? அந்தப் பகுதி, காகித ஆலை ஏற்படுத்துவற்கு உகந்த பகுதி; அமராவதி ஆற்றுப் படுகையில் உள்ள பகுதி, அதிக தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. ஆகவே, தமிழக அரசின் மூலமாக காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு காகித ஆலை அமைக்க வேண்டுமென்றால் நாளொன்றுக்கு 500 டன் செய்தித்தாள் மற்றும் காகிதம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். 500 டன் காகிதம் உற்பத்தி செய்தால்தான் அந்தக் காகித ஆலை இலாபகரமாக, முழுமையாக இயங்கும். அந்த அடிப்படையில் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலம் வேண்டும். தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், புதிய ஆலையை நிறுவ வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் நிலம் வேண்டும். நிலத்திற்கு அருகிலே நீர் வளம் மிகுந்திருக்க வேண்டும். நீர் வளத்திற்காக அமராவதி ஆறு இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். நாளொன்றுக்கு 30,000 கன மீட்டர் தண்ணீர் வேண்டும். கிட்டத்தட்ட 2 இலட்சம் டன் மரக்கூழ் தயாரிப்பதற்கான சவுக்கு மரம், தைல மரம் போன்ற மரங்கள் வேண்டும். அதுவுமில்லாமல் 6 இலட்சம் டன்* bagasse *அதாவது*

கரும்புச் சக்கை வேண்டும். ஆக, 1,000 ஏக்கர் நிலம் வேண்டும்; 2,500 கோடி ரூபாய் முதலீடு வேண்டும், நீர் வளம் நிறைந்திருக்க வேண்டும், 2 இலட்சம் டன் மரக்கூழ் தயாரிப்பதற்குண்டான சவுக்கு மரங்கள், தைல மரங்கள் வேண்டும். அதுமட்டுமல்லாமல், கரும்புச் சக்கை கொண்டு நாங்கள் காகிதம் உற்பத்தி செய்கிறோம். கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் காகிதத்தை உற்பத்தி செய்கிறது. எனவே, 6 இலட்சம் டன் அளவுக்குக் குறையாமல் கரும்புச் சக்கை வேண்டும். நாளொன்றுக்கு 500 டன் காகிதம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். வருடத்திற்குக் கிட்டத்தட்ட 2 இலட்சம் டன் காகிதத்தை காகித நிறுவனம் உற்பத்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஆலை முழு இலாபகரமாக இயங்கும். அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால், காகித ஆலை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, மடத்துக்குளம் பகுதியில் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இயங்கி வருகின்றது. ஆகவே, காகித ஆலைக்குத் தேவையான bagasse கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் கரும்பு விவசாயம் சரிவர இல்லாத நிலையில், கடந்த ஆண்டு சரியான பராமரிப்பு இல்லாத நிலையில், கடந்த கூட்டத் தொடரில், மானியக் கோரிக்கையின்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அந்த ஆலையில் ஏற்பட்டுள்ள பழுதை விரைவாக நீக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அம்மையார் அவர்களின் ஆட்சிக் காலத்தில், கடந்த 2015 ஆம் ஆண்டு விதி 110-ன்கீழ் அந்த ஆலையைத் துவக்குவதற்காக 28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, இன்றுவரை அந்தப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தமிழகத்திலேயே சிறப்பாக இயங்குகின்ற ஆலை. வருகின்ற 23 ஆம் தேதி இயங்குவதாகத் தெரிவித்துள்ளார்கள். அதுவும் முறைப்படி இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே, விரைவில்

[2020 மார்ச் 12

அதைப் பழுதுபார்ப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதி விவசாயிகளுடைய நம்பிக்கையாக விளங்குகின்ற அமராவதி ஆலையை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மடத்துக்குளம், பழனி, ஒட்டன்சத்திரம், தாராபுரம் பகுதிகளில் வாழ்கின்ற,விவசாயம்செய்கின்றகரும்புவிவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அந்த ஆலை சரியான நேரத்தில் இயங்குவதற்கான தேதியை அறிவிப்பது மட்டுமல்லாமல், தேவையான நிதியையும் ஒதுக்கித் தருவார்களா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 23 ஆம் தேதி இயக்கப்படும் என்று அறிவித்திருந்தோம். பல்வேறு machineries–ஐ இப்போது சரி செய்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, அரசினுடைய நிதியையும் ஆலை எதிர்பார்த்துக் கொண்டுள்ளது. நிச்சயமாக modernization செய்வதற்குண்டான நிதியை ஒதுக்கி, உடனடியாக அந்த ஆலை இயங்குவதற்குண்டான நடவடிக்கை அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. நமது Sugar Commissioner, Industries Secretary அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக அதனை நிறைவேற்றித் தருவதற்குண்டான வழிவகை செய்யப்படும் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அமராவதிகூட்டுறவுச்சர்க்கரைஆலையில்உற்பத்தியாகின்றகரும்புச் சக்கையை மட்டும் கொண்டு அந்த factory–ஐ இயக்க முடியாது. காகித நிறுவனத் தொழிற்சாலையைத் தொடங்க முடியாது. காரணம் என்னவென்று கேட்டால், நாங்கள் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் காகிதத்தை செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்மூலம் உற்பத்தி செய்கின்றோம்; கிட்டத்தட்ட ஆறு இலட்சம் டன் கரும்பு சக்கை தேவை. நம்முடைய State–ல் உற்பத்தியாகின்ற கரும்புச் சக்கை முழுமையாக நமக்கே போதுமானதாக இல்லை. நாங்களே கர்நாடகா, ஆந்திரா போன்ற பல்வேறு மாநிலங்களிலிருந்து கரும்புச் சக்கையை இறக்குமதி செய்து, மூலப் பொருட்களைக் கொண்டு அந்த காகிதத் தொழிற்சாலையில் உற்பத்தியை செய்து வருகிறோம். அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கரும்புச் சக்கையை

2020 மார்ச் 12]

மட்டும் கொண்டு எந்தத் தொழிற்சாலையையும் நிறுவ முடியாது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், தற்சமயம் ethanol *உற்பத்தியை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதுவும் முழுமையாக சென்று கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்த* molasses*–ஐக் கொண்டு, எத்தனாலை நாங்கள் உற்பத்தி செய்து வருகிறோம். அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை, அந்த இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொண்டு, உடனடியாக அந்த ஆலை இயங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையத்திற்குப் பக்கத்தில், புகளூரிலே ஒரு காகித ஆலை தமிழக அரசின் சார்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆலையைத் துவங்கும்போதுகூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், நானும் அந்த நிகழ்ச்சியிலே அந்தச் காலத்திலே கலந்துகொண்டோம். அப்படி ஒரு சிறப்பான ஆலை. கரும்புச் சக்கையை வைத்து, அதாவது,* bagasse*–ஐ வைத்துத்தான் அந்த* technology*–ல் அப்போது முதன்முதலாக தமிழ்நாட்டிலே அந்த காகித ஆலையை உருவாக்கினார்கள். இப்போது* bagasse *மிகக் குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தினால் அதற்குப் பதிலாக சவுக்கைப் பயன்படுத்தி, அதை கூழாக்கி, பேப்பரை தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் பிறந்த கடலூர் மாவட்டத்திலே, விழுப்புரம் மாவட்டத்திலே, செங்கல்பட்டு மாவட்டத்திலே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டப் பகுதிகளில்தான் பெரும்பான்மையாக சவுக்கு விளைகிறது. அந்தச் சவுக்கை வாங்கி, மரக்கூழை காகித ஆலைக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், சவுக்கை வெட்டி விவசாயிகள் அனுப்புகின்றபோது, இப்போதிருக்கின்ற டீசல் விலை ஏற்றத்தால் லாரியினுடைய வாடகை அதிகமாகிறது. சவுக்கை அனுப்பினாலும், உடனே பணமும் கிடைப்பதில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர்*

அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியவற்றின் மையப் பகுதியில், ஆலைகளின் சார்பாக, ஒரு மர டிப்போவை நீங்கள் துவக்கினால் விவசாயிகள் நேரடியாக அங்கு வந்து மரத்தை விற்பதற்கு ஏதுவாக இருக்கும். எப்படி தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலே ஒரு டன்னுக்கு 100 ரூபாய் என்று கரும்பு விவசாயிகளுக்கு லாரி வாடகை கொடுத்தோமோ அதேபோல இந்த ஆட்சியில், அரசின் சார்பாக நீங்கள் போக்குவரத்துக்குண்டான வாடகையைக் கட்டி, மர டிப்போவிலிருந்து அந்த சவுக்கு மரங்களை புகளூருக்கு அனுப்புவதன் மூலமாக விவசாயிகள் பயனடைவர். எனவே, அதே மாவட்டத்தைச் சேர்ந்தவர் அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால் இதற்கு தனிக் கவனம் செலுத்தி, உடனே இதற்கு ஆணை பிறப்பிப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாக நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் 1979 ஆம் ஆண்டு, 90 ஆயிரம் டன் capacity–ல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம். டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அந்த நிறுவனம், தற்சமயம் விரிவாக்கம் செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு 4 இலட்சத்து 32 ஆயிரம் டன், செய்தித்தாள் மற்றும் காகிதத்தை உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனமாக உள்ளது. நாளுக்கு நாள் உற்பத்தியின் அளவு உயர்த்தப்பட்டு, அதற்கேற்றாற்போல் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதை குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–05

மேலும், இதற்கு அடுத்தகட்டமாக நாங்கள் ஒரு காகித அட்டை தயாரிக்கின்ற நிறுவனத்தை ஒண்டிப்பட்டியில் ஆரம்பித்திருக்கிறோம். கிட்டத்தட்ட 1 இலட்சத்து 50 ஆயிரம் டன்னுக்கு அதிகமாக காகித அட்டை தயார் செய்கின்ற நிறுவனம் ஒண்டிப்பட்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒண்டிப்பட்டியில்

2020 மார்ச் 12]

ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்திற்குப் பக்கத்திலே விரிவாக்கம் செய்யும் வகையில், 1,500 கோடி ரூபாயில் காகிதக் கூழ் தயார் செய்கின்ற ஒரு நிறுவனத்தையும் நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். தற்சமயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. Finland*–லிருந்து* machineries*-ஐ எல்லாம் வாங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.*

மேலும், Agriculture Department *இருக்கிறது.* TNPL*–ல்* Agriculture*–க்கு என்று ஒரு தனி* wing*–ஐ அமைத்திருக்கிறோம். அந்த* wing*–லிருந்து* cloning method*–ல், சவுக்கு நர்சரி அமைத்து உற்பத்தி செய்கிறோம். ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட நான்கு இலட்சம் கோடிக்கும் மேற்பட்ட நர்சரி நாற்றுகளை நாங்கள் உற்பத்தி செய்கிறோம். குறிப்பாக, கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் கரூர் மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி, அவர்களுக்கு சவுக்கு நாற்றுகளை வழங்கி வருகிறோம்.* TNPL *நிறுவனத்தில், அதற்குண்டான* wing *ஒன்றை நாங்கள் அமைத்திருக்கிறோம். 10* Agriculture *படித்தவர்களை நியமித்து,* Senior officer*–ஐ எல்லாம் நியமித்ததோடு, பல்வேறு* wings*–ஐயும் அமைத்திருக்கிறோம். அந்தளவுக்கு வீரியமுள்ள நர்சரி நாற்றுகளை நாங்கள் உற்பத்தி செய்து கொடுக்கின்றோம். நாற்று உற்பத்தி மூன்று வருடங்களில் கிட்டத்தட்ட 40 டன், அதாவது, ஒரு ஏக்கருக்கு 40 டன் அளவிற்கு உற்பத்தியைச் செய்கின்றோம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *பதில் சொல்லிவிடுகிறேன். அந்தளவுக்கு நாற்றுகளை உற்பத்தி செய்கின்றோம். ஆங்காங்கே வாங்கிக் கொண்டிருக்கிறோம். பொதுவாக, சவுக்கு நடுகின்ற விவசாயிகளைப் பற்றி மாண்புமிகு முன்னாள் அமைச்சர், அன்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். காரணம் என்னவென்று கேட்டால், அவர்கள்* pole*–ஐ எடுத்துவிடுவார்கள்.* Top*–ஐயும்,* Bottom*–ஐயும்தான் நமக்கு போட்டுக் கொடுப்பார்கள். 3 அடி போட்டு* debark *செய்து கொடுப்பார்கள். 2* inch*–க்குமேல் கொடுக்க மாட்டார்கள். கீழே,* bottom *வலுவுள்ளதாக இருந்தால் அது 4* inch, *5* inch *கிடைக்கும். அதை* debark *செய்து அதைக் கொண்டு இறக்கினால் 5,775 ரூபாய்*

அளவிற்கு நாங்கள் rate கொடுக்கிறோம். ஆங்காங்கே agent–ஐ வைத்திருக்கிறோம். Representative போட்டிருக்கிறோம். Debark போடுவதற்கான machineries–ஐ நாங்களே கொடுக்கிறோம். திருவண்ணாமலை மாவட்டம் என்றால். திருவண்ணாமலை மாவட்டத்தில் கொடுக்கின்றோம். விழுப்புரம் மாவட்டம் என்றால், விழுப்புரம் மாவட்டத்தில் கொடுக்கின்றோம். அந்த அளவுக்கு செய்து, எடுத்துக்கொண்டு சென்று, delivery rateஆக 5,775 ரூபாய் கொடுக்கிறோம். காரணம், அந்த நல்ல pole–ஐ அவர்கள் எடுத்துவிடுவார்கள். Top–ல் இருக்கின்ற 2 inch–க்கு மேல்தான் கொடுப்பார்கள். Bottom–ல் இருக்கின்ற அந்த ஒடுக்கு வளைவுகளைத்தான் கொடுப்பார்கள். அந்தமாதிரியான ஒரு சூழ்நிலை இருக்கிறது. நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து, நல்ல கருத்துதான். அதையும் ஏற்றுக்கொண்டு TNPL நிறுவனத்தோடு சேர்ந்து பேசுவோம். அன்பிற்கினிய Principal Secretary to Government, Industries Departmentஅவர்தான்Chairperson.அவர்களோடுகலந்தாலோசனை செய்து, நிச்சயமாக இந்த மாவட்டங்களை உள்ளடக்கி, ஒரு depot அமைத்தால் நமக்கு இன்னும் எளிதாக இருக்குமா என்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்வோம். இப்போது ஒரு pulp factory–ஐ நாங்கள் புதிதாக அமைக்கப் போகிறோம். ஏற்கெனவே, நாளொன்று 1,150 டன் அளவிற்கு நாங்கள் pulp உற்பத்தி செய்கின்றோம், மரக்கூழ் தயாரிக்கின்றோம். அதனை கரூரில் செய்து கொண்டிருக்கின்றோம். இப்போது, தனியாக ஆயிரம் டன் மரக்கூழ் தயாரிப்பதற்குண்டான ஒரு industry–ஐ அமைக்கின்றோம். நிச்சயமாக, நீங்கள் சொன்ன ஆரோக்கியமான கருத்து Industries Department–க்கு உதவியாக இருக்கும். நாங்கள் அந்தக் கருத்தினை ஏற்று, நிச்சயமாக துறையின் செயலாளர் அவர்களோடு கலந்துபேசி, நல்ல முடிவு எடுக்கப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஒரு depot போட்டால் இதைவிட எளிதாக இருக்குமா, வசதியாக இருக்குமா, சவுக்கு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் எண்ணிக்கை அதிகரிக்குமா, அதிகப்படியான மரங்களை எடுத்துக்கொள்ளலாமா என்பதனைப் பார்த்து நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

2020 மார்ச் 12]

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் ஆளாக்கி அழகுபார்த்த அன்பு தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். நாடும், ஏடும் போற்றுகின்ற நல்லாட்சியை நாளும் தமிழ் மக்களுக்குத் தந்து கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், எனக்கு அனுமதியளித்த தங்களையும் அன்போடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பிலே அமையப் பெற்றிருக்கிற பெருந்தலைவர் எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் எத்தனால் தொழிற்சாலை அமைத்துத் தரவும், சுற்றுச் சுவர் கட்டித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனால் factory அவசியமான ஒன்றாகும். ஏற்கெனவே, அமராவதியில் உள்ள மோகனூர் Sugar factory–ல் நாங்கள் எத்தனால் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்கின்ற ஒட்டுமொத்த molasses–ஐப் பயன்படுத்தி, factory–ல் எத்தனால் தயார் செய்ய வேண்டுமென்று அரசினுடைய முடிவு இருக்கிறது. விழுப்புரம் மாவட்டம் அல்லது கடலூர் மாவட்டத்தில் அந்த ஆலையை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அந்தளவுக்கு அங்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று, நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மேலும், சேத்தியாதோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு சுற்றுச் சுவர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மழைக் காலங்களில்,

வெள்ளக் காலங்களில் மிகப் பெரிய பாதிப்பாக இருக்கின்றது. சர்க்கரை நிறுவனத்தின் நிதிநிலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. நிச்சயமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு அரசு வழிவகைக் கடனை ஏற்பாடு செய்வதற்குண்டான நடவடிக்கையையும், சுற்றுச் சுவர் கட்டுவதற்குண்டான நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். குடிமராமத்து நாயகன், விவசாயிகளின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். விருத்தாசலம் தொகுதி, ஏ. சித்தூர் கிராமத்தில் ஆரூரான் தனியார் சர்க்கரை ஆலை கடந்த ஓராண்டுக்கு முன்பு நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. அதிலே விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை சுமார் 14 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்க முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரூரான் சர்க்கரை ஆலை total ஆக திவால் நிலைக்குத் தள்ளப்பட்டு, NCLT–ல் வழக்கு உள்ளது. Complete ஆக அவர்கள் திவாலான காரணத்தினால் வழக்கு நிலுவையில் இருக்கிறது. நாங்களும் அவர்களை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். திவாலான காரணத்தினால் அவர்களுக்கு ஏகப்பட்ட balance கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது, TNPL–க்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மற்றபடி, அவர்கள் வாங்கிய Bank loan–ஐக் கட்ட வேண்டியிருக்கிறது. இப்படி பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. இத்தகைய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் அவர்களிடம் வலியுறுத்திச்

2020 மார்ச் 12]

சொல்லியிருக்கிறோம், அவர்கள்மீது வழக்கு தொடுத்திருக்கிறோம். அவர்களைக் கொண்டு வந்து Court–ல் நிறுத்தினோம். அந்தச் சூழ்நிலை எல்லாம் இருக்கின்றது. வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்திற்காக, NCLT–க்குப் போயிருக்கின்ற காரணத்திற்காக, இதற்கெல்லாம் ஒரு முடிவு கிடைத்தவுடன் நிச்சயமாக, விவசாயிகளுக்குச் சேர வேண்டிய பணத்தை வாங்கிக் கொடுப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை; நிச்சயமாக வாங்கிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

கால்நடை மருத்துவமனை

***60200—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடை மருத்துவமனையைத் துவக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி, முதலில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவித்து பின்பு கால்நடை மருந்தகமாகவும் பின்னர், கால்நடை மருத்துவமனையாகவும் தரமுயர்த்தப்படும். கால்நடை கிளை